கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,

தேதி: 08.04.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தென் கொரியாவின் கியுங் ஹீ பல்கலைக்கழகம் இடையே சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை மற்றும் தென் கொரியாவின் கியுங் ஹீ பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 05.04.2024 அன்று துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, முனைவர் இரா.தமிழ்வேந்தன், வேளாண் பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ், முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் மற்றும் உணவு பதன்செய் பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் Dr.M.பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையே ஆராய்ச்சி, விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் பயிற்சி திறன் ஆகியவை வலுப்பெறும், குறிப்பாக உணவு பதன்செய் பொறியியல் மற்றும் உணவு பேக்கேஜிங் துறையில் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சியை இந்த சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**